EDUZONE: International Peer Reviewed/Refereed Multidisciplinary Journal (EIPRMJ), ISSN: 2319-5045
Volume 11, Issue 2, July-December, 2022, Available online at: www.eduzonejournal.com

# பாரதியார் சிறுகதை உணர்த்தும் அரசியல்

**ச.கவிதா** எம்.ஏ., எம்.பில்.,
உதவிப் பேராசிரியர்,
த.கி.மு.மகளிர் கல்லூரி,
சாய்நாதபுரம், வேலூர்.

**ஆய்வுச்சுருக்கம்:**

பாரதியார் 20-ம் நூற்றாண்டின் தலைச்சிறந்த தவப்புதல்லவர். அவர் தடம் பதிக்காத துறைகள் இல்லை என்றே கூறலாம். சிறந்த கவிஞர், எழுத்தாளர், மேடைப் பேச்சாளர், சிந்தனைச்சிற்பி, அரசியல், ஆன்மீகம், இசை, இலக்கியம், பத்திரிகை என பலவற்றிலும் தைம்மை ஈடுபடுத்திக்கொண்டவர் மக்களின் நலனுக்காக பெரிதும் அரும்பாடுபட்டவர் ஜாதிமத பேதமை பாராட்டாதவர். ஆண் பெண் வேறுபாடு காட்டாமல் சமவாழ்வு வாழவேண்டும் எனும் கருத்தை தன் படைப்புகளில் படைத்தவர். அரசனும் அரசும் ஒன்றே அதனை வெவ்வேறு நிலையில் வைத்து எடைபோடுதல் சிறப்பன்று என்கிறார்.

அரசனின் ஆட்சி சிறப்படைந்தால் குடிமக்கள் ஏற்றம் பெறுவர் அதுவே அரசனையும் நாட்டையும் உயர்த்தும் ஒரே கருவி ஆகும். பாரதியார் தம் சிறுகதை படைப்பில் அரசியல் சிந்தனைகளைப் புகுத்தி நாட்டின் நிலை, மக்களின் நிலை, ஆட்சி அமைப்பு எவ்வாறு உள்ளது என்பதை எடுத்துக்காட்டியுள்ளார் பாரதியார். அதில் ஒரு சில சிறுகதையை கட்டுரையில் எடுத்துக்காட்டியுள்ளேன்.

**முன்னுரை:**

“உயிர்களெல்லாம் தெய்வமின்றிப் பிற வொன்றில்லை

ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்

பயிலுமுயிர் வகை மட்டும் அன்றி யிங்குப்

பார்க்கின்ற பொருளெல்லாம் தெய்வம் கண்டீர்

இயலுகின்ற ஜடப் பொருள்கள் அனைத்தும் தெய்வம்

எழுதுகோல் தெய்வம் இந்த எழுத்தும் தெய்வம்”[1]

மனிதன் மட்டும் தெய்வமன்று மற்ற உயிர்களும் தெய்வமேயாம். தெய்வம் ஒன்றே என்றும் தெய்வம் நீ யென்றுணர் என்றும் சொல்கிறார் பாரதி. அன்பானது சக்தியின் வடிவமாகும். ஆகவே அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு வேண்டும் என்று தன் கவிதை வரிகளில் வெளிப்படுத்துகிறார்.

**பாரதியாரும் அரசியலும்:**

பாரதியும் அரசியலும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றே உரைக்கலாம். ஒன்று நீங்கினும் மற்றொன்று இல்லை என்று கூறலாம். பாரதியின் வாழ்வில் அரசியல் ஓர் பிரிவு அன்று. பிரிக்கவொண்ணாத வண்ணம் தொடக்கம் முதல் இறுதி வரையிலும் ஊடுருவிக் கலந்ததே ஆகும். ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கொடுங்கோன்மை ஆட்சியின் துயரை மக்களுக்கு உணர்த்த, அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்த இதழ்கள் வாயிலாகவும், சொற்பொழிவுகள் மூலமாகவும் முழங்கினார். "பாரதியின் தேசபக்தி, கடன் வாங்கிய சரக்கல்ல அது அவனுடைய சொந்தச் சொத்து. தமிழ் நாடுதான் பாரதி. அப்படித்தான் எனக்குச் சொல்லத்தெரியும்."[2] என்று பாரதியின் நண்பர் எஸ்.துரைசாமி அய்யர் அவர்கள் பாரதியைச் குறித்து குறிப்பிடுகிறார்.

சிறந்த அரசாட்சி அமைய முதன்மையானதாகவும், இன்றியமையாததாகவும் அமைவது நாட்டின் அமைதியே ஆகும். நாட்டில் வாழும் மக்கள் அச்சமில்லாமல் தனது வாழ்வை மகிழ்வாக வாழ வேண்டும். தான் செய்யும் தொழிலுக்கு எந்த ஓர் பாதிப்பும் ஏற்படாமல் நிறைவான மனத்துடன் செயல்படல் வேண்டும். வெளிநாட்டுத் தாக்குதல்களும், உள்நாட்டுப் பூசல்களும் இல்லாத அமைதியான பூமியாக இருந்தாலே அவ்வாட்சியை சிறந்த ஆட்சி என்று மக்கள் ஏற்பர். மக்கள் தங்களின் கருத்துக்களை எங்கும், எப்போதும் வெளியிடுவதற்கு உரிமை உண்டு என்பதை உணர்ந்து செயல்படல் வேண்டும். மனிதனாய்ப் பிறந்து, கவிஞனாய் வளர்ந்து, மானுடத்தை உயர்த்தும் பணியில் மரித்துப் போனவன் பாரதி. உலகம் தழுவிய மானுடத்திற்காகத் தமிழ் மண்ணிலிருந்து கவலைப் பட்ட மகாகவியே பாரதி.

"எனைச் சுடர் மிகு மறிவுடன்

படைத்துவிட்டாய்

வல்லமை தாராயோ - இந்த

மாநிலம் பயனுற வாழ்வதற்கே"[3]

என்ற தன் கவிதை வரிகள் மூலம் விளக்குகிறார். உணவில் உப்பை அளவாய்ச் சேர்த்தால் உணவு சுவை கூடும். அதுபோல, உண்மையை உறுதியாய் உரக்கச் சொன்னால் உலகம் நம்மை என்றும் போற்றும் என்பதை உணர்ந்தவர் மகாகவி.

பாரதி உயர்சாதி, கீழ் சாதி எனும் பேதம் காணாதவர். சாதிப்பேய் தொலைந்தால் மட்டும் நாடு ஏற்றம் பெற்று விளங்கும் என்பதில் உறுதிக் கொண்டு, தன் உணர்வினை பல படைப்புகளின் மூலம் சொல்லிச் சென்றுள்ளார்.

பாரதியாரைப் போன்று சாதிக்கொள்கையை வெறுத்த வரை நான் என்றும் கண்டது இல்லை என்று பாரதிதாசன் தன் கவிதைகளில் குறிப்பிடுகிறார்.

"சாதி ஒழித்திடல் ஒன்று - நல்ல

தமிழ் வளர்த்தல் மற்றொன்று

பாரதியை நாடு மறந்தால் - மற்றப்

பாதி துலங்குவதில்லை...

என்றுரைப்பார் என்னிடத்தில் - அந்த

இன்ப உரைகள் என் காதில்

இன்னும் மறந்துவிடவில்லை"[4]

சாதியற்ற சமுதாயம் கொண்டு அரசியல் அமைப்பானது செயல்பட்டால் நாடு வளம்பெறும். நாட்டு மக்கள் ஏற்றம் பெறுவார்கள்.

"எல்லாரும் மோர்நிலை, எல்லாரும் மோர்விலை

எல்லாரும் இந்நாட்டு மன்னர், நாம்

எல்லாரும் இந்நாட்டு மன்னர், ஆம்

எல்லாரும் இந்நாட்டு மன்னர்"[5]

என்பதை ஒவ்வொரு சிந்தனையில் நிறுத்தி ஆட்சி செய்தால் அதுவே உலகம் உய்ய வழிகாட்டி ஆகும் என்கிறார் மகாகவி.

மெல்ல மெல்ல தேசத்தின் மீசு கனல் வீசவும், அரசியலில் தன்னை ஈர்க்கவும் காரணமானவராக லோகமான்ய பாலகங்காதரதிலகர் என்றே சொல்லலாம், அவர் மீது பெரும் மதிப்பும், மரியாதையும் கொண்டவராக பாரதியார் விளங்கினார்.

கதை என்றெடுத்தால் அதில் கற்பனையும் வந்து புகுவதாக உரைக்கிறார். சிறுகதை மரபு தோன்றுவதற்கு ஆரம்பகால முன்னோடிகளில் பாரதியாரும் ஒருவர்.

**சிறுகதையில் அரசியல் உத்தி:**

சிறுகதையின் வாயிலாக மக்கள் தாம்வாழும் சமூகத்தின் அவல நிலையும், தாம் இச்சமூகத்தில் எத்தகைய வாழ்வினை மேற்க்கொண்டுள்ளோம் என்பதையும், அன்னியர்களின் ஆட்சிக்கு எவ்வாறு அடிமைப்பட்டுள்ளோம் என்பதையும் முதன்மையாகக் கொண்டு கதையைப் படைத்தளித்துள்ளார் பாரதியார்.

**ஓநாயும் வீட்டுநாயும்:**

சமூகம் என்பது மக்களை மட்டும் குறித்தலன்றி, மக்களோடு சேர்ந்து அவர்களின் செல்லப் பிராணியாக விளங்கும், விலங்குகளைக் கொண்டும் அமைகிறது. மனிதன் தன் வாழ்வை சுதந்திரமாக வாழ முற்படுகிறான். அதற்காக பல வழிகளில் தன் பயணத்தை மேற்கொள்கிறான். அச்சுதந்திரம் விலங்குகள், பறவைகள் ஆகிய உயிரினங்களும் மேற்கொண்டு நிற்பதை அறியலாம். சுதந்திரத்தை மையப்படுத்தியும், அடிமைத் தனத்தை உணர்த்தும் விதமாகவும் பாரதியார் இக்கதையை படைத்துள்ளார்.

**ஓநாயின் வாழ்க்கை:**

கரடு முரடான காட்டுப் பகுதியில் வாழ்கிறது. தானே உணவு தேடி உண்ணும் நிலையில் கிடைத்ததைக் கொண்டு வாழ்வதாக இருந்த போதிலும், சுதந்திரக் காற்றை நாள்தோறும் சுவாசிக்கிறது ஓநாய்.

**வீட்டு நாய்:**

உக்கிரசேனப் பாண்டியன், நாயை (பகதூர்) வளர்க்கிறார். அது நேரத்திற்கு ஏற்ப சுவையான உணவும், சுகமான அனைத்து வசதிகளுடன் கொண்ட வாழ்வை அனுபவிக்கிறது. 'சோறு கண்ட இடம் சொர்க்கம்' என்பது போலவும் இதுவே சுதந்திரம் என நினைத்து வாழ்கிறது.

**நாயும், ஓநாயும் சந்தித்தல்:**

நாய் கழுத்தில் உள்ள தழும்பைப் பார்த்து ஓநாய் வினவுகிறது. என் எஜமானனைப் பார்க்க வருபவர்கள் என்னைக் கண்டு அச்சம் கொள்ளாதிருக்க சங்கிலிக் கொண்டு, கழுத்தில் ஓர் வலையத்தில் என்னை கட்டி வைப்பார்கள். அதனால் இத்தழும்பு உண்டாயிற்று என நாய், ஓநாயிடம் பதில் உரைக்கிறது. அதற்கு ஓநாய், "தூ! பிரதிஷ்டப்பயலே! என்னை நீ ஏமாற்றப் பார்த்தாய். உன் பிழைப்பும் ஒரு பிழைப்பா? நீ ஒரு அடிமையாய் இருந்து மெத்த ஜம்பமாய் பேசினாய், நான் சுதந்திரப்பிரியன். எனக்கு எஜமானனும் இல்லை, சங்கிலியும் இல்லை கஷ்ட வாழ்வாய் இருப்பினும் நான் சர்வசுதந்திரன், யதேச்சையாய் எங்கும் செல்வேன். எவரோடும் சேர்வேன். பராதீனம் பிராண சங்கடம்: ஒருவருடைய ஆக்கினைப்படி வரவோ, போகவோ, உண்ணவோ, உறங்கவோ, மலம், ஜலம் கழிக்கவோ சம்மதித்து இருப்பவன் மகாநீசனாய் இருக்க வேண்டும்"[6] என்று கூறுகிறது.

**முடிவு பொருள்:**

ஒவ்வொருவரும் தனது வாழ்வை சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதை உருவக முறையில் எடுத்துரைக்கிறார் நம் மகாகவி. ஆங்கில அரசு பசிப்பிணிக் கொண்டு வாழும் இந்தியர்களை அழைத்துச் சென்று, அவர்களின் சுதந்திரத்தைப் பறித்து அடிமைகளாய் வைத்திருந்ததை, சுட்டிக்காட்டும் விதமாக இக்கதையில் வரும் பாண்டியன் ஆங்கிலேயனாகவும், இந்திய அடிமைகளை வீட்டு நாயாகவும் சுட்டிச் சென்றுள்ளார் மகாகவி.

**காக்காய்ப் பார்லிமெண்ட்:**

'நாராயண பரமஹம்சர்' எனும் சாமியார் ஒருவரிடம் காகத்தின் பாஷையில் சிலவற்றை கற்று, அதனை சோதிக்கும் பொருட்டு மேல் மாடத்து முற்ற வெளியில் வீட்டுச் சுவரின் மேல் நாற்பது காக்கைகள் அமர்ந்திருந்தன. காக்கைகளின் தலைவனான கிழக்காக்கை ராஜா 'காக்காய் பார்லிமெண்ட்' இல் பேசத் தொடங்கியது.

**ருஷ்ய தேசத்து கொக்கு கூறுவதாவது:**

"ஜார் சக்கரவர்த்தி கஷி ஒன்று. அவர் யோக்கியர், அவரைத் தள்ளிவிட வேண்டுமென்பது இரண்டாவது கஷி. இரண்டு கஷியாரும் அயோக்கியர்களாதலால் இரண்டையும் தொலைத்துவிட வேண்டுமென்று மூன்றாவது கஷி. மேற்படி மூன்று கஷியாரும் திருடரென்று நாலாவது கஷி. இந்த நாலு கஷியாரையும் பொங்கலிட்டு விட்டுப் பிறகுதான் இயேசு கிறிஸ்து நாதரைத் தொழவேண்டுமென்று ஐந்தாவது கஷி. இப்படியே நூற்றிருப்பது கஷிகள் அந்த தேசத்தில் இருக்கின்றனவாம்"[7] எனக் கூறிற்று கொக்கு. இக்கொடுமைகளை பார்க்க முடியாமல் இந்தியாவிற்கு வந்தடைந்தது கொக்கு. "அங்கே போய்ச் சிலகாலம் வசித்தால், ருஷ்யாவில் மனுஷ்யர் பரஸ்பரம் கொலை பண்ணும் பாவத்தைப் பார்த்த தோஷம் நீங்கிவிடுமென்று மேற்படி கொக்கு இமயமலையிலே கேள்விப்பட்டதாம்"[8]

**கிழக்காக்கை ராஜாவின் முடிவு:**

ஜார் சக்கரவர்த்தி ஒருவனுக்கு மட்டும் சம்பளம் கோடான கோடி நம்முடைய தேசத்திலும், திருவிதாங்கூர் மகாராஜா, மைசூர் ராஜா என எல்லா ஜனங்களுக்கும் அஸ்தி அதிகம். எனவே நானும் உங்களுடைய தலைவனாதலால் இனி நீங்களும் தங்களுக்கு கிடைக்கும் ஆகாரத்தில் ஆறில் ஒரு பங்கு எனக்குக் கொடுத்துவிட வேண்டும். "நானும் என் பெண் பெண்டாட்டியும், என் குழந்தைகளும், என் அண்ணன், தம்பி, மாமன், மச்சான், என் வைப்பாட்டியார் ஏழு பேர், அவர்களுடைய குடும்பத்தார் இத்தனை பேரும் அரை வயிறு ஆகாரம் கஷ்டமில்லாமல் நடத்துவோம்"[9] என்றது.

**மந்திரி கிழக்காக்கை கூறுதல்**

ராஜா தங்களுக்கு தேவை இருப்பது போன்று எங்களுக்கும் உள்ளது. ஆகவே ஒவ்வொரு காக்கையும் தங்களின் வரும்படியில் பன்னிரண்டில் ஒரு பகுதி கட்ட வேண்டுமென்றும், அதில் மூன்றில் ஒரு பாகம் மந்திரிமார் செலவுக்கு கொடுக்க வேண்டுமென்றும் கூறியது. இதைக்கேட்ட அண்டங்காக்கை நீங்கள் இருவரும் அயோக்கியர்கள், உங்களை உதைப்பேன் என்றது. மற்றொரு காகம் எழுந்து சமாதானப்படுத்திற்று.

**முடிவு பொருள்:**

ஆறறிவுடைய மனிதன் அதற்கு குறைவான அறிவுடை அ∴றிணை உயிரினங்கள் தங்களிடம் (மனிதர்) கற்றுக்கொள்ளும் விஷயங்கள் பல உண்டு. அவை நல்லவையானாலும் சரி, அல்லவையானாலும் சரி. எதனைப் பற்றியும் சிந்தனை செய்யாது தன் போக்கில் சென்ற காக்கை, மனிதர்களின் செயலைக் கண்டு தாமும் நடக்க கற்றுக்கொள்கிறது. நன்மை தீமைகளை பிரித்தறிய தெரியாதவையாக இருந்த காகம் மனிதனின் செயலைக் கண்டு தடம்மாறுகிறது.

ஒருவர் பின் ஒருவர் ஆக்கத்திற்கு வழி தேடுதலன்றி, அழித்தலுக்கு வழி தேடுகிறார்கள். பிறரை அழிக்க செய்பவன் தானும் அழிவான் என்பதே உண்மை தத்துவம். இதை ஒவ்வொருவரும் உணர்ந்தால் உலகம் உள்ளவரை நாம் உயர்வோமாக! ஒரு தலைவன் சிறந்தவனாயின் நாட்டு மக்கள் சிறப்படைவார்கள். அந்த நாட்டின் குடியாட்சியை உலகம் போற்றும் என்பதே இக்கதையின் சாராம்சம்.

**முடிவுரை:**

மனிதன் தன் வாழ்வை வசதிப்படுத்திக் கொள்வது மட்டுமன்றி, சுதந்திர வாசம் கொண்டும் வாழ வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

மனிதனின் ஆட்சியை மற்ற உயிரினங்களும் அதனைக் காட்சிப்படுத்தும் என்பதை காக்காய்ப் பார்லிமெண்ட் கதை உணர்த்துகிறது. மக்களாட்சி மக்களோடு முடிவது கிடையாது. அனைத்து உயிர்களுக்கும் உடைமையானது எனும் கருத்தும் பெறப்படுகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. டாக்டர்.ச.மெய்யப்பன், பாரதியார் கவிதைகள், ப.81

2. வ.ரா.,மகாகவி பாரதியார், ப.26

3. பாரதியார், கவிதைகள்,ப.83

4. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், ப.159
5. டாக்டர். ச.மெய்யப்பன், பாரதியார் கவிதைகள்,ப.167
6. சி.சுப்ரமணிய பாரதியார், பாரதியார் கட்டுரைகள், ப.482
7. பாரதியார் கதைகள்,பக்.220-221
8. மேற்படி, நூல்,ப.221
9. மேற்படி நூல்,ப.221

**துணை நூற்பட்டியல்**

1.ச.மெய்யப்பன், பாரதியார் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம்,பி.கே.ஆப்செட் பிரஸ், சென்னை-600013.

2.வ.ரா., மகாகவி பாரதியார், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை,1990

3.பாரதியார், கதைகள், பூம்புகார் பதிப்பகம்,127 பிரகாசம் சாலை பிராட்வே, சென்னை-600018.